**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, AMBASAMUDRAM.**

**O.S. NO. : 261/2015**

**Deposition of Witness: Pw-1**

NAME : **சரோஜா**

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of

**28.02.2023**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:—**

நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி என்னுடைய இடத்தை ஆக்கிரமித்து சுவர் கட்டி அதன் மீது மாடி வீட்டை கட்டிவிட்டார், அதனை அப்புறப்படுத்த கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்ய எனது வழக்கறிஞருக்கு நாங்கள் 3 பேரும் சேர்ந்து தான் விபரம் சொன்னோம். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நாங்கள் இடத்தை அளக்கவில்லை. வா.சா.ஆ—1 மாதிரி வரைபடத்தில் உள்ள விபரங்களின் படி பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த பகுதியை குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. எனது கணவர் பெயர் சுப்பிரமணியன். எனது மாமனார் பெயர் சங்கரன் ஆசாரி. எனது வீட்டிற்கு மேல்புறம் உள்ள வீட்டில் பிரதிவாதி இசக்கி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி அவரது வீட்டை வேலாயுதம் ஆசாரியிடமிருந்து 1984—ம் ஆண்டில் கிரயம் வாங்கினார்

Sd/—Tr.CSK,PDM Sd/— சரோஜா

என்றால் சரிதான். மேற்படி வேலாயுதம் ஆசாரி அந்த சொத்தை ராமசாமி ஆசாரி (எ) ராமையா ஆசாரியின் மனைவி நாச்சியார் அம்மா வகையறாவிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான்.

2. நான் பிறந்து வளர்ந்தது விக்கிரமசிங்கபுரம் கிராமம் என்றால் சரிதான். எனக்கு திருமணம் முடிந்த ஊர் கல்லிடைக்குறிச்சி ஆத்தியடி தெரு என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு முன்பு நான் என் மாமனார் வீட்டிற்கு வந்தது கிடையாது என்றால் சரிதான். எனக்கு 1984–ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. பிரதிவாதி அவரது வீட்டை 29.02.1984–ம் தேதியில் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். 11.02.1985–ம் தேதியில் பிரதிவாதி மேற்படி வேலாயுத ஆசாரிடமிருந்து கிரய பணப்பற்று ரசீது ஆவணத்தை எழுதிபெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதி கிரயம் வாங்கும் காலத்தில் பழுதடைந்த வடக்கு பார்த்த மச்சி வீடு இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு எனது வீட்டிற்கு மேல்பக்கம் உள்ள மேற்படி வடக்கு பார்த்த மச்சி வீட்டை பழுது பார்த்து பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது மாமனார் சங்கரன் ஆசாரியின் கையொப்பத்தை பார்த்தால் எனக்கு தெரியும். பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தில் எனது மாமனார் சங்கரன் ஆசாரியும் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல், பணப்பற்று ரசீதிலும் என் மாமனார் சங்கரன் ஆசாரி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. எனது வீட்டிற்கு கிழக்கிலும் தெரு உள்ளது, அதேபோல் வடக்கிலும் ஒரு தெரு உள்ளது. என் வீட்டிற்கு தென்புறம் ரேவதி என்பவருடைய வீடு உள்ளது என்றால் சரிதான். அவர் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். என் வீட்டிற்கும், அதற்கு மேல்புறம் உள்ள பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே தென்வடலாக ஒரு சுவர் உள்ளது என்றால் சரிதான். அந்த தென்வடல் சுவர்

Sd/–Tr.CSK,PDM Sd/– சரோஜா

என்னுடைய சொந்த சுவர் என்றால் சரிதான். எனது வீட்டின் தென்புற சுவர் சம்பந்தமாகத்தான் பிரச்சினை என்றால் சரிதான். அதாவது என் வீட்டிற்கு கீழ்புறம் உள்ள சுவற்றிற்கு தென்புறம் தான் பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 2 ஆண் மகன், 1 பெண் மகள் என்றால் சரிதான். அவர்கள் எல்லோருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள ரேவதி பெயரில் உள்ள வீட்டின் கீழ்தளத்தில் ஒரு மகனும், மேல்தள வீட்டில் ரேவதியும், அவரது கணவரான பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்குபக்கம் உள்ள பிரதிவாதியின் வீட்டில் பிரதிவாதியின் இன்னொரு மகன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த பகுதியாக காட்டப்பட்டுள்ள பகுதிக்கு தென்புறத்தில் உள்ள வீடு ரேவதி பெயரில் உள்ள நிலையில் அந்த ரேவதியை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனால், நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

4. எனது மாமனார் நான் குடியிருந்து வரும் வீட்டை வாங்கிய காலத்திலேயே அந்த இடத்தில் ஒரு சாமி பீடம் இருந்தது என்றால் சரிதான். அந்த சாமி பீடத்தை அப்புறப்படுத்திவிட்டு தான் என் மாமனார் வீடு கட்டினார் என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டில் ஆதியில் மாமனார் கட்டிய காலத்தில் கழிவுநீர் ஓடையோ, சாக்கடையோ இல்லை என்று சொன்னால் சரியல்ல, கழிவுநீர் வந்துகொண்டு தான் இருக்கிறது. எனது கணவர் சென்டிரிங் வேலை பார்த்து வந்து 2002-ம் ஆண்டில் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். அந்த சென்டிரிங் வேலையை எனது கணவரின் தம்பி இசக்கி பார்த்து வருகிறார் என்றால் சரிதான். எனது கொழுந்தன் இசக்கி என் வீட்டிற்கு எதிர்வீட்டில் கீழ்புறம் தெருவை ஒட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு ஒரு

Sd/-Tr.CSK,PDM Sd/- சரோஜா

ஆண் மகன், ஒரு பெண் மகள் உண்டு என்றால் சரிதான். பெண் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது மகன் தச்சு வேலை பார்த்து வருகிறார். என் வீட்டிற்கு மேல்புறம் உள்ள பிரதிவாதி இசக்கி வீட்டில் ஒரு பேச்சியம்மாள் பீடம் வைத்து சாமி கும்பிட்டு வருகிறார் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வர கிழக்கிலும், வடக்கிலும் வழி உண்டு என்றால் சரிதான். அதில் எனது வீட்டு கிழக்கு பார்த்த வாசல் ஆதியிலிருந்து இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது வீட்டு வடக்கு பார்த்த வாசலை வீடு கட்டும் போதே 1990–ம் ஆண்டில் வைத்துவிட்டோம். எங்களுடைய இடத்தில் ஒரே வீடாகத்தான் இருந்தது. அதை இரண்டாக மறித்து அதில் வடக்கே பார்த்த வீட்டை வாடகைக்கு விட்டிருந்தோம்.

5. எங்கள் இடத்திற்குரிய ஆவணம் வா.சா.ஆ–1–ல் தென்வடல் 7–1/2 த.மு, கிழமேல் 9 த.மு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தாவா சொத்தை அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால், நான் சொல்வது போல யாதொரு ஆக்கிரமிப்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது வீட்டிற்கு மேல்புறம் உள்ள பிரதிவாதி இசக்கி வீட்டின் அளவும், எனது வீட்டிற்கு தென்பக்கம் உள்ள பிரதிவாதி மனைவி ரேவதியின் பெயரில் உள்ள வீட்டின் அளவும் சரியாகத்தான் உள்ளது என்றும், அதேபோல், என்னுடைய வீட்டின் அளவும் குறையாமல் ஸ்தலத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாமல் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

6. என்னிடம் காட்டப்படும் போட்டோக்கள் எனது வீட்டையும், பிரதிவாதியின் வீட்டையும், எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள பிரதிவாதியின் மனைவி ரேவதி பெயரில் உள்ள வீட்டையும் காட்டக்கூடியது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் மேற்படி போட்டோக்கள் (5 எண்ணம்) பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் மற்றொரு போட்டோ

Sd/–Tr.CSK,PDM Sd/– சரோஜா

நகல்களில் உள்ள வீடுகளானது எனது வீட்டையும், அதற்கு தென்புறம் உள்ள ரேவதியின் வீட்டையும் காட்டக்கூடியது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் மேற்படி போட்டோக்கள் (2 எண்ணம்) பி.வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்பட்டது. எனது வீட்டிற்கும், ரேவதி வீட்டிற்கும் இடையே ஒரு அடி அகலம் இடைவெளி இருந்து வந்தது. அந்த ஒரு அடி அகலம் கொண்ட கிழமேல் இடத்தை தான் பிரதிவாதி சேர்த்து கட்டிவிட்டதாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் வீட்டிற்கு தென்புறம் உள்ள வீட்டை பிரதிவாதியின் மனைவி ரேவதி 13.06.2005–ம் தேதியில் வேலு மூப்பனார் மனைவி மற்றும் மக்களிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியதாக சொல்லப்படும் வீடானது ரேவதிக்கு பதிவு கிரயம் மூலம் பாத்தியப்பட்டுள்ள நிலையில் அந்த ரேவதியை கட்சி சேர்க்காமல் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது அவசியமான நபரை கட்சி சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லும் ஒரு அடி அகல இடத்தில் கட்டியுள்ள சுவரானது ரேவதியின் சொந்தசுவர் என்றால் சரியல்ல. அந்த சுவரை கொண்டு தான் ரேவதியின் வீடும், அவருடைய மாடி வீடும் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், எங்களுடைய இடத்தை பிரதிவாதியோ, அவரது மனைவியோ ஆக்கிரமிப்பு செய்யவேண்டிய அவசியமே கிடையாது என்று சொன்னால் சரியல்ல. ரேவதி வீட்டின் மேல்மாடியில் வடபுற சுவரை சிமெண்ட் பூச விடாமல் நாங்கள் மறுத்துவிட்டதால் அந்த சுவர் பூசப்படாத நிலையிலேயே இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

7. ரேவதி வீட்டின் கிழமேல் வடபுறம் அளவு 10–1/4 த.மு என்றும், தென்வடல் 10 த.மு என்ற அளவுகள் இன்றைய தேதி வரையில் ஸ்தலத்தில் இருந்து வருகிறது

Sd/–Tr.CSK,PDM Sd/– சரோஜா

என்றும், அந்த இடத்தில் தான் ரேவதி வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அளவுகள் கொண்ட இடத்தை தான் ரேவதியின் முன்பாத்தியஸ்தர்களும் அனுபவித்து வந்தார்கள் என்றும், அதே அளவை காட்டி தான் ரேவதிக்கும் கிரயம் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால், நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது ஆடம்பரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றும், அதனால், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பஞ்சாயத்தில் கட்டிட வரைபட அனுமதி பெற்றுதான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி இசக்கி இவ்வழக்கிற்கு தேவையில்லாத கட்சி என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை பொறுத்து இந்த வழக்கில் பரிகாரம் கிடையாது என்றும், அதனால், செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u>–

இல்லை

Sd/– சரோஜா

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

Sd/-Tr.CSK, P.D.M, Ambasamudram